பக்கங்கள் 14 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | புரட்டாதி 28 திங்கட்கிழமை 14.10.2024 | அதிர்வு 74

## புலமைப்பரிசில் பரீட்சை மீண்டும் நடைபெறாது!

### சர்ச்சைக்குரிய 3 கேள்விகளுக்கு புள்ளிகளை வழங்கத் தீர்மானம்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் பகுதி ஒன்றை மீண்டும் நடத்த வேண்டிய அவசியமில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இன்று 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சத்தியலிங்கம் ஊழல் புரியவில்லை; சிவமோகனின் கூற்று பொய்யானது!

### வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன், ந.லோகதயாளன்)

“வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலத்தில் அப்போதைய அமைச்சர் மருத்துவர் ப.சத்திய லிங்கம் எந்தவொரு ஊழல் குற்றத்தின் பெயரிலும் பதவி நீக்கம் செய்யப்படவில்லை என்பதனை மாகாண அவைத் தலைவர் என்ற வகையில் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.”

- இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக நிகழ்வு யாழ். தந்தை செல்வா மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 02





# தீர்வு என்ன என்று வெளிப்படையாகக் கூறாத அநுரவிடம் மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது!

### தமிழரசின் வேட்பாளர் இளங்கோவன் சுட்டிக்காட்டு



(பிரபாகரன் டிலக்சன்)

“தமிழர்களுக்கு என்ன தீர்வு என வெளிப் படையாகக் கூறாத ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியிடம் இருந்து மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளர் சந்திரஹாசன் இளங்கோவன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் அறிமுக விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ். தந்தை செல்வா மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத் துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தென்பகுதியில் ஒரு மாற்றம் இடம்பெற் றிருக்கின்றது. ஊழலுக்கு எதிரான அரசு வேண்டும், எல்லோரும் 02

# சீரற்ற காலநிலையால் மூவர் பரிதாப மரணம்!

கொழும்பு, கம்பஹா உட்பட நாட்டில் 13 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் 34 ஆயிரத்து 492 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 484 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை, வெள்ளத்தால் மூவர் உயிரிழந்துள்ளனர். இருவர் காயம் அடைந்துள்ளனர்.

240 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளன. 6 ஆயிரத்து 963 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

சீரற்ற காலநிலையால் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களிலேயே அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

# வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு நிலையான தீர்வு அவசியம்

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



இவ்வருடம் இரண்டு தடவைகள் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது எனவும், அதற்கமைவாக அடிக்கடி ஏற்படும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கு சரியான மற்றும் நிலையான வேலைத் திட்டம் அவசியம் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, புத்தளம் மற்றும் களுத்துறை மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குப் பணியை முதன்மைப்படுத்துமாறும், அதன் பின்னர், சேதமடைந்த சொத்துக்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஏற்கனவே கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ள 50 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் மேலும் பணம் தேவைப்படுமாயின் அதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார்.

இவ்வருடத்தில் இதற்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளத்தின் போது சேதமடைந்த சொத்துக்கள் புனரமைக்கப்படாத மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கான இழப்பீடுகளை வழங்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுபெற்ற) சம்பத் துய்யகொந்த, அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கே.ஜி.தர்மதிலக, அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) டபிள்யூ.டபிள்யூ.எஸ். மங்கல, தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஆசிறி கருணாவர்தன, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.கே. கருணாநாயக்க, தேசிய அனர்த்த நிவாரண சேவை நிலையத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் நாமல் இந்திக லியனகே, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ, ஜி.ஏ.கே. திலகரத்ன ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

### சத்தியலிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் அண்மையில் வவுனியாவில் வைத்து வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் ப.சத்தியலிங்கம் தொடர்பில் ஒரு பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மருத்துவர் ப.சத்தியலிங்கம் ஊழல் குற்றத்தின் பெயரில் பதவி நீக்கம் செய்யப்படவில்லை. மாகாண அமைச்சர்களுக்கு எதிரான ஓய்வுபெற்ற நீதிபதிகள் குழு சத்தியலிங்கத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமற்றவை எனவும், அவரைச் சகல குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விசாரணைக்குழு பூரணமாக விடுவிப்பதாகவும் எழுத்தில் பரிந்துரைத்துள்ளனர். இதனை அந்த விசாரணை அறிக்கையில் எவரும் எப்போதும் பார்வையிட முடியும்.

அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக – தேர்தலில் போட்டியிடச் சந்தர்ப்பம் கிடைக்காமைக்காகப் பொய்யான குற்றச்சாட்டை மருத்துவர் சிவமோகன் முன்வைக்கின்றார்.” – என்றார்.

### தீர்வு என்ன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமமானவர்கள், எல்லோரும் இலங்கை மக்கள் என்று ஒரு மாற்றத்துக்கான அலை காணப்படுகின்ற அதேநேரம் தமிழர்கள் மத்தியில் பல குழப்பங்கள் காணப்படுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் குழப்பம், கட்சிக்குள் குழப்பம் என நாம் பிரிந்து நிற்கின்றோம்.

இந்தக் குழப்பங்களுக்கு மத்தியில் இந்த நாடாளுமன்றத் தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இளைஞர்கள் தற்போது கூறுகின்றார்கள் தேசிய மக்கள் சக்தியானது சமத்துவமான ஓர் அரசியலைப் பேசுகின்றது, புதிய ஓர் அரசியல் கலாசாரத்தை முன்னெடுக்கின்றது என்று. ஆனால், இடதுசாரி கட்சிகள் சமத்துவம் பேசுவது என்பது புதியதல்ல. அந்தச் சமத்துவ அரசியலிலும் கவலையான விடயம் தமிழ் மக்களை இரண்டாம் தரப்பாகப் பார்க்கின்ற விடயம் காணப்படுகின்றது.

அதிலிருந்து அவர்களிடம் இருந்து மாற்றத்தை எதிர்பார்க்க முடியாது. அவர்கள் தமிழருடைய தீர்வு தொடர்பான தெளிவான விடயத்தை இதுவரையிலும் முன்வைக்கவில்லை. அவர்கள் அதை வெளிப்படையாகக் கூறுவதற்குப் பயப்படுகின்றார்கள். மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.” – என்றார்.

### புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய 3 கேள்விகளுக்குப் புள்ளிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் சில கேள்விகள் முன்கூட்டியே கசிந்த விவகாரம் பெரும் சர்ச்சையை தோற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.




# மதுபானசாலைக்கு எதிர்ப்பு! தையிட்டியில் ஆர்ப்பாட்டம்!!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – தையிட்டி பகுதியில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று திங்கட்கிழமை காலை ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு முன்பாக வலிகாமம் வடக்கு சிவில் சமூக அமையத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவகெங்கா சுதீஸ்னரிடம் மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.








# தென்னிலங்கையின் அரசியல் அலையில் அள்ளுண்டு போக தமிழர் விரும்பவில்லை

## மாற்றத்துக்காக வாக்களிக்கக் கோருகின்றது தமிழர் சம உரிமை இயக்கம்

(எஸ்.நிதர்ஷன்)



தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகள் இதுவரை கிடைக்காத நிலையில் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்துக்குள் அள்ளுண்டுபோக தமிழ் மக்கள் விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ள தமிழர் சம உரிமை இயக்கம், தூய மாற்றத்துக்காக வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் பசு சின்னத்திலும், வன்னியில் பூட்டு சின்னத்திலும் போட்டியிடும் தமிழர் சம உரிமை இயக்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான த.நிகேதன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் வழிப்படுத்தலில் மாற்றத்துக்கான தமிழ்த் தேசிய சக்தியாக தமிழ்த் தேசிய தளத்தில் மக்கள் வாழ்வியலை மேம்படுத்தவே நாம் களம் கண்டுள்ளோம். தூய மாற்றத்துக்கான தமிழ்த் தேசிய களத்தில் தமிழர் சம உரிமை இயக்கத்தினர் யாழில் பசு சின்னத்திலும் வன்னியில் பூட்டு சின்னத்திலும் சுயாதீனமாகப் போட்டியிடுகின்றனர்.

தமிழ் மக்கள் போருக்குப் பின்னரான 15 ஆண்டுகளில் தற்போது களத்திலுள்ள அனைத்து தமிழ்க் கட்சிகளையும் நம்பி களைத்து விட்டனர். நாம் இதுவரை வாக்களித்துத் தெரிவு செய்தவர்கள் தங்களுக்குள் அடிபடுவதிலும் சுகபோகங்களை அனுபவிப்பதிலும் அதனைவிட பார்பெர்மிட் பெற்று மக்களைப் போதைக்கு அடிமையாக்கி இளையோரை அழிக்கத் துணை போகின்றனரே அன்றி மக்களுக்கான எந்த நல்ல விடயங்களையும் செய்யவில்லை.

தமிழர் தரப்பின் இந்தகக் கையறு நிலையில் தெற்கில் மாற்றத்தை ஏற்படுத்தியோர் வடக்கிலும் காலூன்ற முனைகின்றனர். தமிழர்களுடைய அடிப்படை அபிலாஷைகளைச் சமஷ்டி முறை இணைந்த வடக்கு - கிழக்கு மாநிலமோ, சம உரிமைகளோ இன்னும் கிடைக்காத நிலையில், தெற்கின் அலையில் அள்ளுண்டு போக தமிழ் மக்கள் விரும்பவில்லை.

காலத்தின் தேவை கருதி குறுகிய அவகாசம் இருப்பினும் மாற்றத்துக்கான தூய பொது முகங்களாக சமூகத்தின் சகல தளங்களிலிருந்து தமிழ்த் தேசிய மனிதநேயச் செயற்பாட்டாளர்களான நிபுணர்களும் பெண்களும் இளையவர்களும் தியாக வேள்வியில் இளமைக்காலத்தை அரப்பணித்த தமிழ்த் தேசிய போராளிகள் மாற்றுத்திறனாளிகள் என அனைவருக்கும் நாம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம்.

தொகுதிவாரியாக பொறுப்புக்கூறும் கடப்பாட்டுடன் நிறுத்தப்பட்டுள்ள எமது பொது முகங்களான முதன்மை வேட்பாளர் கல்வியியலாளர் கலாநிதி தே.தேவானந்த், ஊடகவியலாளர் ந. பொன்ராசா, சட்டத்தரணி ஜெ. நீலலோஜினி, கிளிநொச்சி இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர் அ.சிவஞானம் உள்ளிட்ட வேட்பாளர் குழாம் யாழில் பசு சின்னத்திலும், தமிழ்த் தேசிய போராளி முல்லை ஆனந்தன், முல்லையின் பட்டதாரி இளைஞர் கோகுலன், வன்னி மாற்றுத்திறனாளிகள் சங்க வவுனியா உப தலைவர் சாந்தகுமார், தேசிய மீனவர் ஒத்துழைப்பு சங்க மன்னார் செயலாளர் திருமதி பாமினி உள்ளிட்ட குழாமினர் வன்னியில் பூட்டு சின்னத்திலும் போட்டிபிடுகின்றனர். இவர்களை ஆதரித்து தமிழ்த் தேசிய மறுமலர்ச்சிக்கு வழிவகுக்க வேண்டுகின்றோம்.” - என்றுள்ளது.

# மேலும் 31 சீனப் பிரஜைகள் கைது!



கண்டி மற்றும் எத்துல்கோட்டே பகுதிகளில் சந்தேகத்துக்கிடமான முறையில் தங்குமிடங்களைப் பெற்றிருந்த 31 சீனப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி - அனிவத்த பகுதியில் ஹோட்டலொன்றில் இருந்து கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளில் பெண்ணொருவரும் உள்ளடங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளுடன் இவர்கள் தொடர்பைப் பேணியிருந்தார்களா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எத்துல்கோட்டே பகுதியில் தொடர்மாடிக் குடியிருப்பொன்றில் தங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகளில் 4 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கண்டி - பல்லேகல - நத்தரன்பொத்த பகுதியில் 126 சீனப் பிரஜைகளும், 2 வியட்நாம் பிரஜைகளும், தாய்லாந்து பிரஜையொருவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 2 நாட்களில் மாத்திரம் குறித்த பகுதிகளில் கைது செய்யப்பட்ட 161 வெளிநாட்டவர்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் மீது ஓமந்தைப் பொலிஸ் துப்பாக்கிச்சூடு!

## பெறுமதியான மரங்களுடன் இருவர் கைது

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தைப் பகுதியில் மரக்கடத்தலில் ஈடுபட்டவர்கள் பொலிஸாரை மோதித் தள்ளி தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தி, இருவரைக் கைது செய்துள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் தொவித்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்துப் பாலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் ஓமந்தையில் இருந்து மறவன்குளம் நோக்கிக் கடத்தப்பட்ட மரக்குத்திகளுடனான வாகனம் பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டது.

இதன்போது, பொலிஸாரை மோதிவிட்டு மரக்குற்றிகளுடன் வாகனம் தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதனையடுத்து வாகனமும் அதில் இருந்த மரக்குற்றிகளும் மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.



அவர்களை இருவரையும் மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஓமந்தைப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மிக முக்கிய சந்தர்ப்பம்

பிரிட்டனிடம் இருந்து நாடு சுதந்திரம் அடைந்ததாக கூறப்படும் இந்த 76 ஆண்டுகளில் நாட்டினுடைய தேசிய இனப் பிரச்சனை மிக மோசமான கட்டத்துக்குக் கூர்மடைந்திருக்கின்றது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வு என்ற பெயரில் காலம் காலமாக ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டு, அதனால் நாடு பெரும் இன யுத்தத்தில் மூழ்கிப் பேரழிவைச் சந்தித்து, எழுந்திருக்கும் நேரம் இது.

பௌத்த - சிங்களப் பேரினவாதத்தைச் சற்று ஒதுக்கி வைத்து விட்டு, தேசிய இனப் பிரச்சனைக்குப் பரஸ்பர கலந்துரையாடலில் தீர்வு காணும் வாய்ப்பு - சூழல் - சந்தர்ப்பம் - இப்போது கிட்டி வருவதாக பலரும் நம்புகின்ற நிலைமை தோன்றியிருக்கின்றது.

சரியோ, பிழையோ இதுவரை காலமும் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ற முயற்சியில் இந்திய தலையீட்டோடு கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தமும், அதன் கீழாக மாகாண சபை முறைமையும், குறைந்தபட்சம் அரசமைப்பிலாவது - அரைகுறையாக வேனும் - நீடிக்கின்றன.

அந்த ஒழுங்குமுறை தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வாக இல்லாவிட்டாலும் கூட, இந்திய பின்னூட்டல் உறுதியுடன் அது இன்னமும் இலங்கை அரசமைப்பிலும் சட்டங்களிலும் இருக்கின்றது.

புதிதாக அதிகாரத்துக்கு வந்திருக்கும் அநுரகுமார திஸநாயக்கவும் அவரது தேசிய மக்கள் சக்தி அரசினரும் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் கணிசமான வெற்றியை ஈட்டிய பின்னர் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தையும் உள்ளடக்கி புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியில் ஈடுபடப் போகின்றார்கள் என்பதும், அதில் முன்னர் இருந்தமை போன்ற பௌத்த - சிங்கள பேரினவாத மேலாண்மை அதிகம் இருக்காது என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது என்பதும் தற்போதைய நிலைமை.

எது, எப்படியாயினும் அநுரகுமார திஸநாயக்கவின் அரசு முன்னெடுக்கும் தீர்வுத் திட்ட நகர்வில் 13ஆம் திருத்தம் மறைந்து போகும் சாத்தியங்கள் அதிகம் உள்ளன.

இந்திய உறுதிப்பாட்டுடன் கூடிய 13ஆவது திருத்தம் அற்றுப்போய், வேறு ஏற்பாடுகள் தீர்வாக வரும்போது அவை குறித்து ஆராய்ந்து, பரிசீலித்து, வாதிட்டு, சரியானவற்றை - தமிழர் தேசத்துக்கு உகந்தவற்றை - நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடிய அதிகார பகிர்வு முறைமையை உறுதிப்படுத்துவது - சிறுபான்மையினரான தமிழர் தேசத்தினுடைய முக்கிய பொறுப்பும் கடப்பாடு ஆகும்.

இந்தக் கடப்பாட்டை நிறைவு செய்யக் கூடிய - தகுதி உடைய - திறமை மிக்க - அதுபற்றி விவாதித்து, தீர்மானிக்கும் ஆளுமை மிக்க - பிரதிநிதிகளை இந்த தடவை தமிழர் தேசம் நாடாளுமன்றுக்கு அனுப்ப வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வெறும் வாய்ச்சவடால் பேச்சு பேசுபவர்களையோ, உணர்ச்சி உரை நிகழ்த்துபவர்களையோ, செயற்றிறன் அற்றவர்களையோ நாடாளுமன்றத்துக்கு அனுப்பாமல் தமிழர் தேசம் மிகக் கவனமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பம் இது.

நாடாளுமன்றம் யுத்த களம் அல்ல. வெறும் உணர்ச்சிப் பேச்சுக்களை, வரலாற்று ஆவணங்களாக நாடாளுமன்றப் பதிவேட்டில் பதியும் விடயமும் இது வல்ல. அதையும் தாண்டி ஆழமான விவகாரம் இது.

அறிவு நிலையில் கருத்து விவாதம் நடத்தி, தமிழருக்கு உரியதை பேச்சு மேசையில் - நாடாளுமன்றத் தளத்தில் - நியாயப்படுத்தி பெற்று கொடுக்கக்கூடிய ஆளுமையும் திறமையும் அதற்கான மதிப்பும் மிக்கவர்களை நாடாளுமன்றுக்கு தமிழர் தேசம் அனுப்ப வேண்டிய வரலாற்றுச் சந்தர்ப்பம் இது.

இதில் தவறிழைப்போமானால் மீண்டும் ஒரு தடவை இனப் பிரச்சினைக்கு நீதி,நியாயமான - நிலைத்து நீடிக்க கூடிய - தீர்வு பெறுவதற்கான சந்தர்ப்பத்தை திரும்பவும் இழந்தவர்கள் ஆவோம்.

ஆகவே தமிழர் தேசம் விழிப்புடன் காரியமாற்ற வேண்டிய தேர்தல் இது!

# தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை; சிலரின் செயல்பாடுகளால் மக்கள் அதிருப்தி!

## மன்னார் வேட்பாளர் சட்டத்தரணி டினேசன் தெரிவிப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை. கட்சியில் உள்ளவர்கள் சிலரின் தன்னிச்சையான செயல்பாடுகளால் கட்சி மீது மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர் என்று தமிழரசு கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி செல்வராஜ் டினேசன் தெரிவித்தார்.



தமிழரசு கட்சி சார்பாக மன்னார் மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (13) மன்னாரில் உள்ள இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் இரண்டு வேட்பாளர்கள் தமிழரசு கட்சி சார்பாக போட்டியிடுகின்றனர். அவர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்பது தனது குறிக்கோளாக உள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவரது கருத்து எமக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துகின்றது.

எங்களை வெற்றி பெற வைக்க தமது முயற்சிகளையும் மக்கள் மத்தியில் தெழிவூட்டளையும் முன்னெடுக்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியை மக்கள் வெறுக்கவில்லை. கட்சியில் உள்ளவர்கள் சிலரின் தன்னிச்சையான செயல்பாடுகளையே மக்கள் வெறுத்து வருகின்றனர் என்பதை நான் வருகை தந்தவர்களிடம் தெரிவித்துள்ளேன்.

பல்வேறு கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்திக்கும் போது இந்தக் குற்றச்சாட்டுக்களை மக்கள் என்னிடம் முன்வைத்துள்ளனர்.எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வகையில் நாங்கள் செயல்பட வேண்டும்.– என்றார்.

# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் எலும்பியல் சத்திர சிகிச்சை விடுதிகள் திறப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிய எலும்பியல் துறை சத்திர சிகிச்சை ஆண், பெண் விடுதிகள் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள் மற்றும் ஏனைய திடீர் விபத்துக்களால் பாதிக்கப்படும் நோயாளிகளுக்கு உயர் தரமானதும் பாதுகாப்பான சத்திர சிகிச்சை சேவைகளை வழங்கும் நோக்கில் இது திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் மிக நீண்ட காலத் தேவையாக இருந்த எலும்பு முறிவு மற்றும் சிகிச்சைக்கான விசேட விடுதிகளை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் ஹனிபா திறந்து வைத்தார்.



இந்த நிகழ்வில் எலும்பியல் சத்திர சிகிச்சை விசேட நிபுணர்கள் டாக்டர் பி. திலீபன், டாக்டர் ஆர்.எம்.எம். தீபன் ஏனைய விசேட வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.






# வடிகான் பராமரிப்பு இன்மையால் மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம்

(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனையிலநேற்று (13) மதியம் தொடக்கம் பெய்துவரும் மழையால் பொது மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

கல்முனை மாநகர சபையால் மழை நீர் செல்லும் வடிகான் முறையான பராமரிப்பு செய்யப்படாது உள்ளது.

இதனால் வீதிகளுக்கு மேல் மழை நீர் வருவதுடன் பொது மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் உட் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வெள்ள நீர் வீடுகளுக்கு செல்லாமல் இருப்பதற்காக பொது மக்கள் மண்மூடைகளை அடுக்கி வரகின்றனர்.

பொறுப்பு வாய்ந்த கல்முனை மாநகர சபை அதிகாரிகள் மழை நீர் வடிகான்களை விரைந்து சீர் செய்ய வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு அரிசி ஆலை!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கன்னியா பகுதியில் நெல் அரிசி உற்பத்தி ஆலை ஒன்றை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் இதனைத் திறந்து வைத்தார்.

இந்த ஆலை மூலம் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துக்காகவும் பல உற்பத்திகளை இதன் மூலம் வேறு மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பல தொழில் வாய்ப்புக்களை இதன் மூலம் வழங்க முடியும் எனவும் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.






# நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை வெற்றி நிச்சயம் என்கிறார் ஜீவன்!

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாவட்டத்தில் இந்த முறை சேவலின் வழியில் யானை பயணிப்பதால் வெற்றி நிச்சயம் என்று முன்னால் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனைத்து மலையக தலைமைகளையும் இம்முறை ஒற்றுமையாக இணைந்து நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு அழைத்தேன். அதேபோல கடந்த ஐந்து வருடமாக மலையகத்தில் அனைத்து கட்சி தலைமைகளும் ஒற்றுமையாக செயற்படுவதற்கு அழைப்பு விடுத்த போதிலும் அது நடக்கவில்லை.

ஆகையால் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் அவரவர் தமக்கான கட்சிகளை தெரிவு செய்து போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூவர் இந்த மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடுகிறது. எம்முடன் ஐ.தே.கவை சேர்ந்த மேலும் பலர் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி அனரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசு நாடாமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்டாவிட்டால் நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார சிக்கல் ஏற்படும் என சுட்டிக்காட்டினார்.

முன்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த காலங்களில் உலக நாடுகளுக்கு நிதியுதவி தொடர்பாக முன்மொழியப்பட்டிருந்தமையால் தற்போது புதிய அரசுக்கு உலக நாடுகள் நிதிகளை வழங்க முன்வந்துள்ளது.

நாட்டில் மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் நிவாரண உதவிகளை வழங்கி ஆதரவைக் காட்டிவரும் ஜனாதிபதி, மலையகப் பெருந்தோட்டத் தேயிலை தொழிலாளர்களுக்கு என்ன செய்துள்ளார்.

அதேநேரத்தில் நாம் தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்று தருவதாக வாக்குறுதி வழங்கினோம். அதேபோல இம்முறை 1350 ரூபா சம்பள உயர்வு தொழிலாளர்களுக்குக் கிடைத்தது . ஆகையால் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

அத்துடன் கடந்த அரசில் பெருந்தோட்டப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்காக நிதிகளை அமைச்சு ஒதுங்கியிருந்தது. அவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த நிதிக்கு தற்போது என்ன நடந்துள்ளது என்பதை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அரசு எமக்கு தெரிவிக்க வேண்டும்.– என்றார்.



# ஊருக்கு எம்.பி. என்றதெல்லாம் இதுவரை போதும்; நல்லதொரு அரசியல் தலைவரை உருவாக்குக!

## திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர் சபீஸ் தெரிவிப்பு

(மாளிகைக்காடு)

முஸ்லிம்களுக்கு அடையாளம் பெற்றுத்தந்த மர்ஹூம் பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஸ்ரப் ஒரு தலைவனாக எல்லா மக்களையும் தன் குழந்தைகளாக நினைத்து கடமை புரிந்தார். அவரின் மறைவுக்குப் பின் வந்த முஸ்லிம் தலைவர்கள் சுயநலத்தை விதைத்து மக்களை திசை திருப்பி விட்டனர்.

இதுவரை காலமும் ஊருக்கு எம்.பி. என்றதெல்லாம் போதும். நல்லதொரு அரசியல் தலைவரை உருவாக்குங்கள். அதற்காகச் செயற்படுங்கள்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், திகாமடுல்ல மாவட்ட வேட்பாளருமான எஸ்.எம் சபீஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட பல்வேறுபட்ட கிராமங்களில் மக்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடும் போதே இதனைத் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்,

நல்லதொரு தந்தை ஒரு பிள்ளை நுளம்பு கடியிலும், இன்னொரு பிள்ளை வெறும் தரையிலும் மற்றப் பிள்ளை குளிரூட்டப்பட்ட அறையிலும் படுத்து தூங்க இடமளிக்கமாட்டார்.

அப்படிப்பட்ட ஒரு தலைவன் எமக்குத் தேவை. முஸ்லிங்களை சமமாக வழிநடத்தும் பக்குவம் உள்ள தலைவர்களை



உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

ஒருத்தன் நடுவீதியில் போதையில் நிதானம் இழந்து கிடந்ததைக் கண்டும் அவனுக்கு நாம் வாக்களிப்போம் என்றால் அதுதான் முட்டாள் தனம்.

கடந்த காலங்களில் இருந்தது போன்று ஊர் வாதம் இம்முறையும் இருந்தால் நாம் சமூக அளவில் தோற்போம். நிச்சயமாக இனவாத, பிரதேச வாத சிந்தனை கொண்டோர்களால் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கி விட முடியாது.

நான் ஊரின் தலைமை பள்ளிவாசல் நிர்வாக தலைவராக இருந்த காலத்தில் போதைவஸ்துக்கு அடிமையானவர்களின் திருமணங்களை கூட இடைநிறுத்தி இருந்தமையை மக்கள் அறிவார்கள். நாம் நமது எதிர்கால சந்ததிகளை சிறப்பாக வாழ்விக்க கடமைப்பட்டுள்ளோம்.- என்றார்.

# எமது மக்களுடைய தேவைகள் நிறைவேற யாருடனும் இணைந்து செயற்பட நாம் தயார்

## முன்னாள் எம்.பி. அங்கஜன் இராமநாதன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

எமது மக்களுடைய தேவைகள் நிறைவேற யாருடனும் இணைந்து செயற்பட தயார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜனநாயக தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

நான் 2010 இல் மக்கள் சேவைக்குள் பிரவேசித்ததில் இருந்து 2024 ஆம் ஆண்டுவரை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி என்ற தேசியக் கட்சியிலேயே அங்கம் வகித்தேன்.

நான் அரசியலுக்குள் பிரவேசிக்க காரணம் எனக்கு சொத்து சேர்க்கவோ என் தலைமுறைக்கு சொத்து சேர்க்கவோ அல்ல.

மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எம் மக்களை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்று சேர்க்க வேண்டும். அதற்காகவே அரசியலுக்குள் வந்தேன்.

நான் 2010 இல் அரசியலுக்கு வரும் போது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரே ஜனாதிபதியாக இருந்தார்.

அப்போது மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டேன். பின்னர் 2013 இல் முதல் தடவையாக வடக்கு மாகாணசபை உறுப்பினராக தெரிவானேன். ஆனால் அந்த மாகாணசபை தமது தகுதிக்கு அப்பாற்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றி கிடப்பில் போடுவதாகவும் நிதியை வீணடிப்பதாகவும் நிதியை மீள தெற்குக்கு அனுப்பும் செயற்பாட்டிலும் ஈடுபட்டது.

அதில் இருந்து எம் மக்களுக்கு எதுவுமே செய்ய முடியாது என்ற நிலையில் தான் 2015 நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டேன். சொற்ப வாக்குகளில் வெற்றியை தவற விட்ட போதிலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எனக்கு தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பளித்தார்.

நான் ஒருபோதும் கட்சி மாறவில்லை.14வருடங்களாக ஒரே கட்சியில்தான் தொடர்ந்தேன்.கட்சித் தலைவர்கள் மாறினார்களே தவிர நான் கட்சி தாவவில்லை. ஆனால் இன்று சுதந்திர கட்சி பிளவுபட்டிருப்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். கடந்த தேர்தலில் நான் போட்டியிட்ட சின்னம் கூட நீதி மன்றில் உள்ளது. அதனால் தான் எம் மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக இந்த முறை தமிழ் கட்சியில் களம் இறங்குகிறோம்.

நான் இதுவரை மக்களின் விருப்பத்துக்கு மாறாகச் செயற்பட்டதில்லை. பொருளாதார நெருக்கடியின் பின்னரான ஆட்சி மாற்றத்தின் பின் எனக்கு அமைச்சைப் பெறுவதற்கு பல தடவைகள் அழைப்பு வந்தது.

நான் அப்போது மக்களின் ஆணை இன்றி அரசுடன் இணையக்கூடாது என்ற முடிவில் இருந்தேன்.நான் எதிர்க்கட்சியில் இருந்தாலும் மக்களுக்கானதை அரசிடம் இருந்து பெற்றுக் கொடுத்தேன்.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் கூட எதிர்கட்சியில் இருந்து கொண்டு 150 மில்லியன் அபிவிருத்தி வேலைத் திட்டம் மற்றும் 150 மில்லியன் வீதி திட்டம் ஆகியவற்றை பெற்று எம் மாவட்ட மக்களிடம் கொடுத்தேன். ஏனைய எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் போல் மக்களை நடுத்தெருவில் விடாது சொந்த நிதியில் கல்வி ஊக்குவிப்பு நடவடிக்கை உள்ளிட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம்.

கடந்த 2022 இல் கோட்டபாய ராஜபக்ஷவுடைய நடவடிக்கை சரி இல்லை என்ற போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியே நேரடியாக அதனை உணர்த்தி விட்டு அரசில் இருந்து முதலில் வெளியேறியது.எனவே எம் மீது எவரும் எவ்வாறான விமர்சனங்களையும் முன்வைக்க முடியும். நான் ஒருபோதும் கட்சி தாவவில்லை. ஒரே கட்சியில் தான் பயணித்தேன். அதேவேளை மக்களின் விருப்புக்கு மாறாக எதனையும் செய்யவுமில்லை.

நான் என் மக்களின் தேவைகள் நிறைவேற யாருடனும் இணைந்து செயற்பட தயாராக உள்ளேன்.

மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கோட்டபாய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் இணைந்து செயற்பட்டிருக்கிறேன்.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுடனும் இணைந்து வேலை செய்வோம்.- என்றார்.

# முஷாரப்போடு இணைந்து பயணிப்பதாக வெளியான செய்தியில் உண்மை இல்லை!

## பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அப்துல் வாசித் தெரிவிப்பு

(அபு அலா)



தேர்தலில் இருந்து விலகி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபோடு இணைந்து பயணிப்பதாக கடந்த இரு தினங்களாகச் செய்திகள் வெளியாகி வருகின்றன.

இவ்வாறு பரப்பப்பட்டுவரும் செய்திகளில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் திகாமடுல்ல தேர்தல் மாவட்ட பொத்துவில் தொகுதி வேட்பாளரும் பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான எம்.எஸ்.அப்துல் வாசித் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சகோதரர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரபின் வெற்றி வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

அதனால், அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்வதற்காக அவரின் ஆதரவை வழங்குமாறு கூறியிருந்தேனே தவிர, தேர்தலில் இருந்து விலகி விட்டுக் கொடுப்பதாகவோ அல்லது முஷாரப் போடு இணைந்து பயணிப்பதாகவோ ஒருபோதும் யாரிடமும் கூறவில்லை.

இந்த முறை தேர்தலில் வெற்றிபெறுவதற்கான சகல வாய்ப்புக்களும் எனக்குள்ளது என்பதைப் பற்றி அவருக்கு மிகத் தெளிவாக தெளிபடுத்தியுள்ளேன்.

அது மாத்திரமல்லாது கட்சித் தலைமையால் எங்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவம் பற்றியும் தெளிவுபடுத்தினேன்.

இம்முறை நாடாளுமன்றம் செல்வதற்கான சகல வாய்ப்புக்களும் எனக்குள்ளது. அதற்கான ஆதரவுகளை முழுமையாக வழங்குவதற்கு பொத்துவில் மக்களும், பொத்துவில் தொகுதி மக்களும் முன்னின்று செயற்படுகின்றனர்.

இதை சகித்துக்கொள்ள முடியாத சிலரால் இந்தப் போலியான வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. அதை யாரும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.- என்றார்.





# இலவசக் கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்!

(அபு அலா)



சமூக சேவை அடிப்படையில் Channel eye optical நிறுவனத்தால் இலவச கண் பரிசோதனையும், மூக்கு கண்ணாடி விநியோகமும் இன்று (14) திருகோணமலை கோபாலபுரம் மாவட்ட சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கோபாலபுரம், நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி போன்ற பிரதேசங்களில் இருந்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வருகை தந்து, தங்களின் கண்களை பரிசோதனை செய்து, அவர்களின் கண் குறைபாடுகளுக்கேற்ப கண்ணாடிகளையும் பெற்றுச் சென்றனர்.



# கணினித் தொகுதிகள் அன்பளிப்பு

(தலவாக்கலை பி.கேதீஸ்)

தலவாக்கலை சென். கூம்ஸ் பாடசாலையின் பழைய மாணவரும் புஸ்சல்லாவ தேசிய பாடசாலையின் ஆசிரியருமான மனோ பிரகாஷ் தலவாக்கலை சென். கூம்ஸ் பாடசாலைக்கு கணினி தொகுதிகள் மற்றும் கணினி தளபாடங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வுகள் பாடசாலையின் அதிபர் தங்கராஜ் தலைமையில் நேற்று (13) நடைபெற்றது.




# வங்கக் கடலில் உருவானது காற்றழுத்த தாழ்வுப் பகுதி

## இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

தென் கிழக்கு வங்கக்கடலில் இன்று காலை காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது மேலும் வலுவடைந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறி மேற்கு, வடமேற்கு திசை நோக்கி நகரும் என்றும் கணித்துள்ளது. இதனால் தமிழகத்தின் வட மாவட்டங் களில் மழை அதிகரிக்கும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகவுள்ள சூழலில் நாளை, நாளை மறுதினம் வட தமிழகம், தெற்கு ஆந்திர கடலோர பகுதிகளை நோக்கி நகரக்கூடும். இதனால், இன்று முதல் 17 ஆம் திகதி வரை தமிழகம் முழுவதும் பரவலாக கனமழை பெய்யக்கூடும் என்று ஏற்கெனவே சென்னை வானிலை ஆய்வு மையமும் தெரிவித்தி ருந்தது.

மேலும், தென்னிந்திய பகுதிகளில் கிழக்கு, வட கிழக்குதிசையில் இருந்து



காற்று வீசத் தொடங்கியுள்ளது. இதன் தாக்கத்தால், தென்னிந்திய பகுதிகளில் வடகிழக்கு பருவமழை நாளை அல்லது நாளை மறுதினம் தொடங்கக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தான் தென் கிழக்கு வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வடதமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அதை ஒட்டி நகர்வதால் வட கடலோர மாவட் டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது என்று தெரிவித்துள்ளது.

சென்னைக்கு இன்று கனமழைக் கான எச்சரிக்கையும் நாளை மிக கனமழைக்கான எச்சரிக்கையும் நாளை மறுநாள் அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கையும் இந்திய வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ளது.

முன்னதாக, தமிழகத்தில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால். மாவட்ட ஆட்சியர்கள் மழை நிலவரங்களை கண்காணித்து அனைத்துவிதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டு தலைமைச் செயலர் கடிதம் அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணி நிலைக்காது!




## தமிழிசை சவுந்தரராஜன் திட்டவட்டம்

தமிழகத்தில் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணி நிலைக்காது என முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கூறியுள்ளார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்வதற்காக புதுவை முன்னாள் ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று மதுரை சென்றுள்ளார்.

தொடர்ந்து மதுரை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“மழையிலிருந்து மக்களை பாதுகாப்பது ஒரு புறம் என்றாலும் குளங்களை தூர்வாரி குடிநீரை சேமித்திருக்க வேண்டும். பெரியார் அணையில் குழாய்கள் உடைந்துள்ளதால் குடிநீர் வீணாகி விட்டது. குடிநீர் இல்லாமல் குடியிருப்புகளுக்குள் தண்ணீர் புகுந்து விட்டதால் பிரச்சினை அதிகமாகி விட்டது. தி.மு..க அரசு சென்னை, மதுரை, திருச்சி என அனைத்து மாவட்டங்களையும் மழைக்கு தயார் செய்வதில் முற்றிலும் தோல்வி அடைந்துள்ளது.

உதயநிதி வார் ரூமில் அமர்ந்து விட்டதால் மழைக்கான ஏற்பாடுகளை செய்து விட்டது போன்ற தோற்றத்தை உருவாக்குகிறார்கள். ‘விடியா அரசு’ இன்று ‘விளம்பர அரசாக’ மாறிவிட்டது. மிகப்பெரிய வானியல் சாகசத்தை கூட மக்கள் மகிழ்ச்சியுடன் பார்க்கக் கூடிய ஏற்பாடுகளை செய்ய முடியாத அரசு எதற்கெடுத்தாலும் விளம்பரம் தான். அன்னை மீனாட்சி நம்மை காப்பாற்றுவாள், ஆனால் இந்த தி.மு.க. ஆட்சி நம்மை காப்பாற்றுமா என்றுதான் கவலையாக உள்ளது. தி.மு.க. ஆட்சியில் பருப்பு கூட வேகாது போல உள்ளது, தீபாவளிக்கு ரேஷன் கடைகளில் துவரம் பருப்பு கிடைக்காது என அச்சுறுத்தல் மக்களிடம் இருக்கிறது.

காஷ்மீர் தேர்தல் மிகப்பெரிய வெற்றி. அரியானாவில் உள்ள வாக்கு சதவீதத்தை தி.மு.கவும் காங்கிரசும் ஆராய்கின்றனர். ஆனால் வெற்றி பெற்ற கூட்டணியை விட காஷ்மீரில் பா.ஜ.க. 25 சதவீதம் பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி ஏழு சதவீதத்திற்கு சுருங்கி விட்டது. காங்கிரஸ்/க்கு எதிர்காலமே இல்லை. ராகுல் காந்தி மிகப்பெரிய தலைவராக உருவெடுத்து விட்டார் என்று சொன்னார்கள். ஆனால் செயற்கைத் தலைவர்களை உருவாக்க முடியாது, மோடி போன்ற இயற்கையான தலைவர்கள் தான் நாட்டு மக்கள் எதிர்பார்ப்பார்கள்.

மத்திய அரசின் திட்டங்களை மக்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் தி.மு.க. ஏற்றுக்கொள்ளவில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கதிர் சக்தி திட்டம் கொண்டு வந்த போது அதை நான் முழுவதும் வரவேற்றேன். தேசத்தை சின்ன, சின்ன விஷயங்களில் கூட பிரதமர் முன்னெடுத்து செல்வதற்கு இது மிகப்பெரிய உதாரணம். ரயில் விபத்து மத்திய அரசின் சதியா என்று கூறிய ராகுல் காந்தியை வன்மையாக கண்டிக்கிறேன். வான் சாகசத்தின் போது ஐந்து பேர் உயிரிழந்தபோது அவர் எங்கே சென்று இருந்தார்.

வான் சாகசத்தில் உயிரிழந்ததை அரசியலாக்கக் கூடாது என்று சொல்கிறார்கள், ஆனால், தி.மு.க. எதை எடுத்தாலும் அரசியலாக்கும். தி.மு.கவின் கூட்டணி கட்சிகளே அதற்கு எதிராக திரும்பி இருக்கின்றன. 2026 தேர்தலில் நிச்சயமாக இதே தி.மு.க. கூட்டணி நிலைக்காது– என்றார்.





# காசாவில் பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 22 பேர் பலி; 80 பேர் காயம்

காசாவின் மத்தியப் பகுதியில் உள்ள நுசிராட்டில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், அந்த தாக்குதலில் 80 பேர் வரை காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

பாலஸ்தீனியர்கள் தஞ்சமடைந்திருந்த பாடசாலை ஒன்றின் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இஸ்ரேலின் வடக்குப் பகுதியில் உள்ள இராணுவத்தளத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 7பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.








# டொனால்ட் ட்ரம்ப் மீது மீண்டும் கொலை முயற்சி

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கொலை செய்யும் திட்டத்துடன் துப்பாக்கிகளுடன் வந்த நபர் ஒருவரைக் பொலிஸார் கைது செய்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக ட்ரம்ப் அறிவிக்கப்பட்டதிலிருந்து அவரை கொலை செய்ய முயற்சிகள் நடந்து வருகிறன.

இந்நிலையில், 3 ஆவது முறையாக, டொனால்ட் ட்ரம்பை கொலை செய்ய முயற்சி நடந்துள்ளது.

அமெரிக்கா – கோசெல்லாவில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் நபரொருவரை துப்பாக்கியுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

49 வயதான வெம் மில்லர் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்படி நபரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் 02

கனடா முரசு

திங்கட்கிழமை 14/09/2024

## கட்சி அலுவலகம் மீது வெடிகுண்டு அச்சுறுத்தல்

பிரிட்டிஷ் கொலம்பியாவின் காம்ப்பெல் ரிவர் பகுதியில் அமைந்து உள்ள என்.டி.பி கட்சி பிரசார அலுவலகம் மீது வெடி குண்டு தாக்குதல் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. 02



# கனடா பிரதமர் பதவி விலகுவதற்கு இதுவே பொருத்தமான சந்தர்ப்பம்

## ஜஸ்டின் ட்ரூடோவிற்கு கட்சிக்குள் கிளம்பியுள்ள எதிர்ப்பு

**கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**கட்சியை சேர்ந்த சில தரப்பினர் பிரதமர் ட்ரூடோ பதவி விலக வேண்டு மென கோரி உள்ளனர்.**

**பிரதமர் பதவி விலகுவதற்கு இதுவே பொருத்தமான தருணம் என கட்சியின் சில உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.**

**எனினும் லிபரல் கட்சிக்குள் பிரதம ருக்கான ஆதரவு மாறுபட்ட அடிப்படை யில் காணப்படுகின்றது.**

வர்த்தக அமைச்சர் மேரி நாக் பிரதமர் தொடர்ந்தும் பதவியில் நீடிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

ஆசியான் மாநாட்டில் பிரதமருடன் மேரி நாக் லாவோசிற்கு விஜயம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தாம் ஒரு லிபரல் கட்சி உறுப்பினர் எனவும் பிரதமரின் மீது பூரண நம் பிக்கை தமக்கு உண்டு எனவும் அமைச் சர் நெக் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் லிபரல் கட்சி பின் னடைவை சந்தித்திருந்தது.

இவ்வாறான ஒரு பின்னணியில் நாளுக்கு நாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ விற்கு எதிரான நிலைப்பாடுகள் அதி கரித்துச் செல்வதாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

# காதல் வலையில் சிக்கி பணத்தை இழந்த மூதாட்டி

வயோதிப பெண் ஒருவர் காதல் வலையில் சிக்கி பணத்தை இழந்த சம்பவமொன்று கனடாவில் பதிவாகியுள்ளது.

இந்த மோசடி சம்பவத்தில் மேற்படி வயோதிப பெண் 20 ஆயிரம் டொலர்கள் இழக்க நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நியூபவுண்ட்லாண்ட்டைச் சேர்ந்த 77 வயதான எலானி ஹார்னும் என்ற பெண்ணே இந்த மோசடியில் சிக்கி பணத்தை இழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தந்தையை இழந்த தமது தாய் தனிமையில் வாழ்ந்து வந்ததாகவும் அண்மையில் புற்று நோய் சிகிச்சை எடுத்துக் கொண்டதாகவும் அந்த பெண்ணின் இரண்டு மகள்களும் தெரிவித்துள்ளனர்.

முகநூல் ஊடாக வயோதிப் பெண்ணை ஒருவர் ஏமாற்றி 20000 டொலர்கள் வரையில் பணத்தை மோசடி செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.







# கனடாவில் பாடசாலை ஒன்றின் மீது இரண்டாம் தடவையும் துப்பாக்கிச்சூடு

கனடாவின் நோர்த் யோர்க் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் மீது இரண்டாவது தடவையாக துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் அமைந்துள்ள யூத மகளிர் பாடசாலை ஒன்றின் மீது இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இதற்கு முன்னரும் ஒரு தடவை இந்தப் பாடசாலை மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாகனத்தில் வந்த சந்தேக நபர்கள் பாடசாலை மீது துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பாடசாலையில் எவரும் இருக்கவில்லை எனவும் இதனால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காணொலிகளின் அடிப்படையில் இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்த துப்பாக்கி சூடு தொடர்பில் பொலிஸார் இதுவரையில் தகவல்கள் எதையும் வெளியிடவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலை நடத்திய சந்தேகம் நபர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

யூத மத எதிர்ப்பு விழிப்புணர்வு சந்தர்ப்பமாக இந்த தாக்குதல் சம்பவத்தை கருதுவதாக மா நகர மேயர் ஒலிவியா சௌள தெரிவித்துள்ளார்.





# அறிமுகம் இல்லாதவர்களை விருந்துக்கு அழைத்த கனடியர்

## குவியும் பாராட்டுகள்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் டெய்லர் என்பவர் நன்றி பாராட்டும் இரவு விருந்து உபசாரத்தில் பங்கேற்குமாறு தனக்கு அறிமுகம் இல்லாதவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆறு மாத காலத்திற்கு முன்னதாக தனது குடும்பத்தை இழந்ததாகவும் பல்வேறு நெருக்கடிகளை எதிர் நோக்கியதாகவும் டெய்லர் தெரிவிக்கின்றார்.

மக்கள் தம்மை சுற்றி இருப்பதன் அவசியத்தை உணர்ந்து கொண்டதாகவும் நல்ல உணவை பகிர்ந்து கொள்வதையும் அன்பை பரிமாறுவதும் எவ்வளவு முக்கியமானது என்பது தமக்குத் தெரியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பகுதியில் மக்கள் பயன்படுத்தப்படும் சமூக ஊடக வலைத்தளம் ஒன்றில் விருந்து உபசாரம் தொடர்பான அழைப்பினை அவர் விடுத்துள்ளார்.

இந்த நன்றி பாராட்டும் விருந்துபசார நிகழ்வுகளில் எவரும் தனித்திருக்கக் கூடாது எனவும் தன்னுடன் இணைந்து உணவு உட்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மரணத்தின் விளிம்பை எதிர் நோக்கிய காரணத்தினால் இரண்டாம் வாய்ப்பு எவ்வளவு முக்கியமானது என்பது தமக்கு தெரியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான ஒரு பின்னணியில் விருந்து உபசாரத்திற்கு செல்லாதவர்களும் அவருக்கு உணவு பொருள்களை நன்கொடையாக வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.







## கட்சி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேம்ப்பெல் ரிவர் அலுவலகத்தில் பணிபுரியும் பிரசார மேலாளர் ஒருவருக்கு அச்சுறுத்தல் வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரசார செய்தித் தொடர்பாளர் ஹீதர் ஸ்டவுடன்பர்க் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கு உடனடியாக வழங்கப்பட்டதாகவும், கட்சிப் பணியாளர்கள் பிரசார அலுவலகத்தை விட்டு தற்காலிகமாக வெளியேறியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.